INSTITUTE FOR HEALTH POLICY

**72, Park Street, Colombo 2, Sri Lanka**
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

## ஊடக அறிவிப்பு

**திகதி வரை தடையாணை**

திகதி : 17 September 2024
நேரம் : 08:00 AM Sri Lanka Time

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

செயலாளர்/நிர்வாகி
மின்னஞ்சல் : info ‘at’ ihp.lk

**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**


மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi ‘at’ ihp.lk ட்விட்டர் : @ravirannaneliya


# ஆகஸ்ட் மாத பொது தேர்தல் வாக்காளர் தீர்மான கருத்துக்கணிப்பில் எஸ்.ஜே.பி. மற்றும் என்.பி.பி./ஜே.வி.பி. புள்ளிவிவர சமநிலையில் இருந்தன

## *IHP MRP ஆகஸ்ட் 2024 பொது தேர்தல் வாக்காளர் தீர்மானம் புதுப்பிப்பு*

IHP இன் SLOTS MRP மாதிரியின்(01/2024ல் திருத்தப்பட்டது) சமீபத்திய பொதுத் தேர்தல் வாக்காளர் தீர்மான மதிப்பீடுகளை முந்தைய மாதங்களுடன் ஒப்பிடும்போது ஆகஸ்ட் மாதத்தில் கணிசமான மாற்றங்கள் எதுவும் இல்லை. எஸ்.ஜே.பி. மற்றும் என்.பி.பி/ஜே.வி.பி. முறையே 29% மற்றும் 28% வாக்காளர் ஆதரவுடன் புள்ளிவிவர சமநிலையில் இருந்தனர் மேலும் முன்னணியில் இருந்தனர். 19% முடன் எஸ். எல். பி. பி., 9% முடன் யூ. என். பி. மற்றும் 4% முடன் ஐ.டி. ஏ. கே. அவர்களை பின் தொடர்ந்தனர். ஜூலை மாதத்துடன் ஒப்பிடுகையில் எஸ்.ஜே.பி. மற்றும் என்.பி.பி/ஜே.வி.பி. க்கான ஆதரவு ஆகஸ்ட் மாதத்தில் முறையே 3 மற்றும் 2 சதவீதம் குறைந்துள்ளது. இது பிழை விளிம்பிற்குள் உள்ளது.

ஆகஸ்ட் மதிப்பீடுகள் தற்காலிகமானவை மேலும் இரண்டு முன்னணி கட்சிகளும் 2-3% பிழை விளிம்பை கொண்டுள்ளனர்.




SLOTS கருத்துக்கணிப்பு இயக்குனர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய, “பொதுத் தேர்தலில், எஸ். எல். பி. பி. யின் ஜனாதிபதி வேட்பாளரைவிட, எஸ். எல். பி. பி. க்கான ஆதரவு கணிசமாக அதிகரித்துள்ளதை எங்கள் பொதுத் தேர்தல் வாக்களர் தீர்மானம் கருத்துக்கணிப்பு காட்டுகின்றது. மேலும், அதுபோலவே யூ.என்.பி.யைவிட ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்ரமசிங்கவிற்கான ஆதரவு அதிகம் என்பதையும் காட்டுகின்றது. எஸ்.எல்.பி.பி.யை ஒரு அரசியல் சக்தியில்லை என்று நீக்குவது விவேகமற்றது. இதற்கு காரணம், கடந்த ஆகஸ்ட் மாத கருத்துக்கணிப்பில் எஸ். எல்.பி.பி.யின் வாக்காளர்கள் அவர்களது ஜனாதிபதி வாக்கினை ரணில் விக்ரமசிங்கவிற்கு மாற்றுவதுபோல் தோன்றியது. அவர்கள் இதனை அவர்களின் இரண்டாவது விருப்பத்தேர்வின் மூலமாகக் கூட செய்திருக்கலாம். இரண்டாவது விருப்பத்தேர்வு முறையை அவர்கள் சரிவர புரிந்துகொள்ளவில்லை என்பதனை இது சுட்டிக்காட்டுகின்றது.” என்று கருத்து தெரிவித்தார்.

IHP இன் ஆகஸ்ட் மாத தரவுகளுடன் ஒப்பிடும்போது, ஜூலை 2024 இல் என்.பி.பி/ஜே.வி.பி மற்றும் எஸ்.ஜே.பி. யின் மதிப்பீடுகள் தலா 2 புள்ளிகளால் கீழ்நோக்கி திருத்தப்பட்டன.

இம்மதிப்பீடுகள் வாக்களிக்கக்கூடியவர்களை மட்டும் முன்னிலைப்படுத்தாமல் வயதுவந்தவர்கள் அனைவரையும் உள்ளடக்குவதோடு, ஜனவரி 2024ல் திருத்தப்பட்ட IHP SLOTS மல்டிலெவெல் ரிக்ரெஷென் மற்றும் போஸ்ட் ஸ்ற்றாடிபிகேஷன் (Multilevel Regression and Poststratification) (MRP) மாதிரியை அடிப்படையாகக்கொண்டு கணிக்கப்பட்டவை. IHP தனது வாக்காளர் மாதிரியை மேம்படுத்துவதில் செயல்பட்டு வருகிறது, மேலும் எதிர்கால புதுப்பிப்பில் வாக்களிக்கக்கூடியவர்களின் வாக்காளர் தீர்மானத்தை வெளியிடுவதை மீண்டும் தொடரும். ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளில் பெரும்பாலான மதிப்பீடுகளில், வயது வந்தவர்கள் மற்றும் வாக்களிக்ககூடியவர்களுக்கிடையே வாக்காளர் தீர்மானத்தில் உள்ள வேறுபாடுகள் பொதுவாக 1-2%ஆக இருந்ததைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த ஆகஸ்ட் 2024 புதுப்பிப்பு, ஆகஸ்ட் 2024ல் நடத்தப்பட்ட 1,153 பேட்டிகள் மற்றும் அக்டோபர் 1 2021–செப்டம்பர் 02 2024 வரை நடத்தப்பட்ட 19,721 பேட்டிகளை அடிப்படையாகக்கொண்டு மதிப்பிடப்பட்டது. IHPன் SLOTS MRP முறையானது, பதிலளிப்பவர்களின் பலவகையான குணாதிசயங்களுக்கும் அவர்களின் கருத்துக்களுக்கும் – இங்கு, 'இன்று பொதுதேர்தல் நடந்தால் நீங்கள் எந்த கட்சிக்கு வாக்களிப்பீர்கள்' என்னும் கருத்து – இடையேயான தொடர்பை மல்டிலெவல் புள்ளியியல் மாதிரியின் (multilevel model) மூலம் முதலில் மதிப்பிடுகிறது. அதன் பின் தேசிய மக்கள்தொகைக்கு ஏற்ப அளவீடு செய்யப்பட்ட ஒரு பாரிய தரவு கோப்பைப் பயன்படுத்தி, ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு கட்சிகளுக்கு அவர்கள் வாக்களிக்ககூடிய நிகழ்தகவினைப்பற்றி மல்டிலெவல் மாதிரியின் (multilevel model) கூறுவதை வைத்து, அக். 2021 முதல் ஒவ்வொரு மாதமும் வாக்காளர் தீர்மானத்தை கணிக்கிறது ('post-stratification'). மாதிரியில் உள்ள நிச்சயமற்ற தன்மைகளை பிரதிபலிக்கவும் பிழை விளிம்புகளைப் பெறவும் மல்டிலெவல் மாதிரி (multilevel model) 100 முறை மதிப்பிடப்பட்டது. சென்ற புதுப்பிற்குப்பின் மேலும் தரவுகள் சேகரிக்கப்பட்டதால் இந்த புதுபிப்பில் முந்தைய மாதங்களின் வாக்காளர் தீர்மான முடிவுகள் மாற்றமடைந்துள்ளன, மேலும் இந்த மாற்றங்கள் பிழை விளிம்பிற்குள் உள்ளன.

## முந்தைய அறிக்கைகள் ihp.lk விலிருந்து கிடைக்கும்


Institute for Health Policy, February 2023, "NPP/JVP and SJB running neck-and-neck amongst voters, but no party dominates. IHP MRP General Election Voting Intentions Estimates January 2023".
*Available at: https://ihp.lk/publications/docs/SLOTSReport202303.pdf*

Institute for Health Policy, August 2023, "Support for major parties changes little in July, with NPP/JVP and SJB ahead, but large numbers of voters uncommitted. IHP MRP General Election Voting Intentions Update July 2023".
*Available at: https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230821.pdf*

Institute for Health Policy, September 2023, "NPP/JVP retain an edge over the SJB amongst voters in August. IHP MRP General Election Voting Intentions Update August 2023".

*Available at:* *https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230925.pdf*

Institute for Health Policy, October 2023, "NPP/JVP leads with 42% of likely voters, ahead of the SJB (22%) and UNP (13%) in September. IHP MRP General Election Voting Intentions Update September 2023".
*Available at:* *https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20231023.pdf*

Institute for Health Policy, November 2023, "Little change in voter intentions in October, with NPP/JVP consolidating its lead at 40%. IHP MRP General Election Voting Intentions Update October 2023".
*Available at:* *https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20231123.pdf*

Institute for Health Policy, January 2024, "NPP/JVP on 39% of all adults, ahead of SJB (27%) and SLPP (10%) in December '23. IHP MRP General Election Voting Intentions Update December 2023". *Available at:* https://ihp.lk/press-releases/nppjvp-39-all-adults-ahead-sjb-27-and-slpp-10-december-23

Institute for Health Policy, February 2024, "NPP/JVP maintains lead in voting intentions, with continuing increase in SJB support. IHP MRP General Election Voting Intentions Update January 2024". *Available at:* https://ihp.lk/press-releases/nppjvp-maintains-lead-voting-intentions-continuing-increase-sjb-support

Institute for Health Policy, March 2024, "NPP/JVP (44%) and SJB (30%) continue to consolidate support in February 2024. IHP MRP General Election Voting Intentions Update February 2024". *Available at:* https://ihp.lk/press-releases/nppjvp-44-and-sjb-30-continue-consolidate-support-february-2024

Institute for Health Policy, April 2024, "Increasing support for SJB (38%) pushes it ahead of NPP/JVP (35%) in March 2024. IHP MRP General Election Voting Intentions Update March 2024". *Available at:* https://ihp.lk/press-releases/increasing-support-sjb-38-pushes-it-ahead-nppjvp-35-march-2024

Institute for Health Policy, May 2024, "SJB and NPP/JVP neck-and-neck with 34% support amongst adult voters in April. IHP MRP General Election Voting Intentions Update April 2024". *Available at:* https://ihp.lk/press-releases/sjb-and-nppjvp-neck-and-neck-34-support-amongst-adult-voters-april

Institute for Health Policy, June 2024, "General Election voting intention shows marginal changes in May, SJB and NPP/JVP lead with 34% of support. IHP MRP General Election Voting Intentions Update May 2024". *Available at:* https://ihp.lk/press-releases/general-election-voting-intention-shows-marginal-changes-may-sjb-and-nppjvp-lead-34

Institute for Health Policy, July 2024, "Decreasing support for NPP/JVP, SJB leads with 38% of all adults in June. IHP MRP General Election Voting Intentions Update June 2024".
*Available at:* https://ihp.lk/press-releases/decreasing-support-nppjvp-sjb-leads-38-all-adults-june

Institute for Health Policy, August 2024, "SJB and NPP/JVP lead in voting intent in July but both stuck at one-third of adults. IHP MRP General Election Voting Intentions Update July 2024". *Available at:* https://ihp.lk/press-releases/sjb-and-nppjvp-lead-voting-intent-july-both-stuck-one-third-adults

## IHP பற்றி

இந்த கருத்துக்கணிப்பை ஆணையிடுவதற்கும் வடிவமைக்ககவும் IHP மட்டுமே பொறுப்பு, மேலும் இதற்கு முழு பொறுப்பு ஏற்றுக்கொள்கிறது. IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு, இலங்கையில் மற்றும் வெளிநாடுகளில் மூன்று தசாப்தங்களாக பல கருத்துக்கணிப்புகளை நடத்தியுள்ளார்.

## முறைமை விவரங்கள்

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறை மூலமும் நேர்முக நேர்காணல்களின் மூலமும் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் பேட்டிகளை SLOTS ஒருங்கிணைக்கின்றது. குறிப்பிட்ட மாதத்தில் வாக்களிப்பை மதிப்பிட அனைத்து SLOTS பேட்டிகளின் தரவினையும் முழுமையாக பயன்படுத்தி, வாக்களிப்பு தீர்மானத்தை மல்டிலெவெல் ரிக்ரெஷென் மற்றும் போஸ்ட் ஸ்றாடிபிகேஷன் (Multilevel Regression and Post-Stratification) (MRP) தழுவிய முறை கொண்டு IHP மதிப்பீடு செய்கின்றது. உடன் தொடர்பு முறையின் நிச்சயமற்ற தன்மை மல்டிபல் இம்ப்யூடேஷன்(multiple imputation) என்னும் முறையின் மூலம் கருதப்படுகின்றது.

ஆகஸ்ட் 2024ற்கான MRP மதிப்பீடுகள் ஆகஸ்ட் 2024ல் நடத்தப்பட்ட 1,153 பேட்டிகள் மற்றும் அக்டோபர் 1 2021–செப்டம்பர் 02 2024 வரை நடத்தப்பட்ட 19,721 ஒட்டுமொத்த பேட்டிகளை அடிப்படையாகக்கொண்டு கணக்கிடப்பட்டது. யூ.என்.பி., எஸ்.எல்.பி.பி., எஸ்.எல்.எப்.பி., சி.மு.க., இ.தொ.க., ஐ.டி.ஏ.கே. மற்றும் “மற்ற” கட்சிகளுக்கு பிழை விளிம்பு 1.1–1.8% என்றும், என்.பி.பி./ஜே.வி.பி. மற்றும் எஸ்.ஜே.பி.க்கு 2.1–2.6% என்றும் மதிப்பிடப்பட்டது. பிழை விளிம்பை மதிப்பிட 100 பூட்ஸ்ட்ராப்புகள் பயன்படுத்தப்பட்டன. பூட்ஸ்ட்ராப்பிங் என்பது ஒரு புள்ளியியல் நுட்ப முறை.

MRP என்பது மற்ற நாடுகளில் உள்ள வாக்கெடுப்பு நிறுவனங்களால் சிறிய கூறுகளை முழுமையாக பயன்படுத்துவதற்கு அதிகமாக உபயோகப்படுத்தப்படும் ஒரு முறையாகும். குறிப்பாக YouGov, UK Brexit வாக்கெடுப்பு மற்றும் சமீபத்திய UK பொதுத் தேர்தல்களின் முடிவுகளை முன்னறிவிக்கப் பயன்படுத்தியது. தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், இனக்குழு, சமூகபொருளாதார நிலை, கல்வி, இடம், மற்றும் 2019 ஜனாதிபதி மற்றும் 2020 பொது தேர்தல் வாக்களிப்போடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் சரிசெய்யப்பட்டன.

## நிதியுதவி

SLOTS களப்பணியானது 2021 ஆம் ஆண்டு முதல் பல்வேறு நிதியுதவியாளர்களால் ஆதரிக்கப்பட்டுள்ளது. இவர்கள் கேள்வி வடிவமைப்பு, தரவுப் பகுப்பாய்வு அல்லது அறிக்கையிடல் ஆகியவற்றில் எந்தப் பங்கையும் வகிப்பதில்லை. நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை (Neelan Tiruchelvam Trust) , ஆசியா மன்றம் (Asia Foundation), ஐரோப்பிய ஆணையகம் (European Commission), ஐக்கிய இராச்சியத்தின் உடல் நலப் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK National Institute for Health and Care Research), ஓபன் சொசையட்டி அறக்கட்டளை நிறுவனம் (Foundation Open Society Institute), மற்றும் ஏனையவர்கள் நிதியளித்துள்ளனர். தற்போதைய கள வேலைகளை வெலக்ஸ் ஸ்டிப்டங் அரக்கட்டளை (Velux Stiftung foundation), நியூ யார்க் பல்கலைக்கழகம் அபு தபி (New York University Abu Dhabi), மற்றும் IHPன் பொது நல ஆய்வு நிதி (IHP Public Interest Research Fund) ஆதரிக்கின்றினர். அதோடு ஆய்வின் கண்டுபிடிப்புகள் முந்தைய மற்றும் தற்போதைய நிதி வழங்குனர்களின் எண்ணங்கள் மற்றும் கருத்துக்களை பிரதிப்பலிப்பன அல்ல. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.